மேலும், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள காடுகளின் பரப்பளவு 20,347.98 ஹெக்டேர் ஆகும். தரம் குன்றிய காடுகளின் பரப்பளவு 7,049.08 ஹெக்டேர் ஆகும். காடுகளின் தரம் குன்றுவதற்கு வறட்சி மற்றும் கால்நடை மேய்ச்சலே முக்கிய காரணங்களாகும். சிவகங்கை மாவட்டத்திலுள்ள 12,649.29 ஹெக்டேர் காடுகள், தமிழ்நாடு வனக் கோட்டக் கழகத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்டு, அதிலே கூழ் மரங்கள், முந்திரி மரங்கள் வளர்க்கப்பட்டு, அறுவடை செய்யப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 344, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

344—

சீரமைத்தல்

***30271—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், செல்லப்பம்பாளையத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்கி, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், செல்லப்பம்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தின் பழைய கட்டடத்தின் பிரசவ வார்டில் ஏற்பட்டுள்ள பழுதுகள் மற்றும் புதிய கட்டடத்தின் பராமரிப்புப் பணிகள்

2014 ஆகஸ்ட் 5]

ரூபாய் 2.74 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்கெனவே 2011–2012 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டன. தற்பொழுது பழைய கட்டடத்தினுடைய மேற்கூரை மற்றும் பழுதுகளை நீக்கவும், புதிய கட்டடத்தின் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும், பொதுப் பணித் துறையிலிருந்து உரிய மதிப்பீடு பெறப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, தற்போது அப்பணிகள் யாவும் முடிவுறும் நிலையில் உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உடுமலைப்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட செல்லப்பம்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பராமரிப்புப் பணிகளுக்காக ரூ.20 இலட்சம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மூலமாக வழங்கப்பட்டு, அந்தப் பணிகளெல்லாம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்று கூறினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.*

மேலும், ஒவ்வொரு ஒன்றியத்திலும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்டதாக தரம் உயர்த்த வேண்டும் என்ற திட்டத்திலே உடுமலைப்பேட்டை ஒன்றியத்திலுள்ள எரிசானம்பட்டியை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த ஆணை பிறப்பித்து, நிதி ஒதுக்கீடு செய்து, டெண்டர் பிறப்பித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியை அன்போடு கூறிக்கொள்கிறேன்.

மடத்துக்குளம் தாலுகா புதிதாக உருவாக்கப்பட்டதாகும். மடத்துக்குளம் தாலுகாவில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கும், ஒருங்கிணைந்த தாய்–சேய் மருத்துவப் பிரிவு CEmONC Centre *உருவாக்கித்*

தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மடத்துக்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரையில், மடத்துக்குளம் பகுதி வருவாய்த் துறையால் தாலுகாவாக நிலை உயர்த்தப்பட்ட காரணத்தால், அதனை தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்துவதற்கு, உரிய கருத்துகள் துறை வாரியாகப் பெறப்பட்டு, அரசின் ஆய்வில் உள்ளது. இதுகுறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. கவன ஈர்ப்பு

சமையல் எரிவாயு உருளை கசிவினால் ஏற்படும் விபத்துகளைக் கட்டுப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் மற்றும் திரு. க. தினகரன் ஆகியோரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.*

***திரு. க. தினகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சமையல் எரிவாயு உருளை கசிவினால் ஏற்படும் விபத்துகளைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம்" குறித்து அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*